இந்து தமிழ் திசை

# ஜிப்மர் வெளிப்புற சிகிச்சை பிரிவு இன்று இயங்காது

**புதுச்சேரி**

புனித வெள்ளியையொட்டி ஜிப்மர் வெளிப்புற சிகிச்சைப் பிரிவு இன்று இயங்காது. இதுதொடர்பாக புதுச்சேரி ஜிப்மர் நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

மத்திய அரசு விடுமுறை தினமான புனித வெள்ளியை முன்னிட்டு ஜிப்மர் வெளிப்புற நோயாளிகள் சிகிச்சை பிரிவு இன்று இயங்காது.

நோயாளிகள் இன்றயை தினம் ஜிப்மர் வருவதை தவிர்க்க வேண்டும். அவசர சிகிச்சை பிரிவுகள் வழக்கம் போல இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலை மலர்
2-4-2026 (வியாழக்கிழமை)

# நாளை ஜிப்மர் வெளிப்புற சிகிச்சை பிரிவு இயங்காது

புதுச்சேரி, ஏப்.2—

புதுவை ஜிப்மர் நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மத்திய அரசு விடுமுறை தினமான நாளை (வெள்ளிக்கிழமை) புனித வெள்ளியை முன்னிட்டு ஜிப்மர் வெளிப்புற நோயாளிகள் சிகிச்சை பிரிவு இயங்காது. நோயாளிகள் அன்றைய தினம் ஜிப்மர் வருவதை தவிர்க்க வேண்டும். அவசர சிகிச்சை பிரிவுகள் வழக்கம்போல் இயங்கும்.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாலை எக்ஸ்பிரஸ்
மாலை நாளிதழ்
MAALAI EXPRESS
மாநிலம் பயனுற!

# புனித வெள்ளியை முன்னிட்டு ஜிப்மர் புறநோயாளிகள் பிரிவு நாளை இயங்காது




**புதுச்சேரி, ஏப். 2-**

புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் புனித வெள்ளியை முன்னிட்டு நாளை புறநோயாளிகள் பிரிவு இயங்காது என ஜிப்மர் மக்கள் தொடர்பு அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது, மத்திய அரசு விடுமுறை தினமான நாளை (3ம் தேதி) புனித வெள்ளியை முன்னிட்டு ஜிப்மர் புறநோயாளிகள் பிரிவு இயங்காது. எனவே, இந்த தேதியில் நோயாளிகள் வெளிப்புற சிகிச்சை பிரிவுக்கு வருவதை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். எனினும் அவசர பிரிவு சேவைகள் அனைத்தும் வழக்கம்போல் இயங்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
3.4.2026 (வெள்ளிக்கிழமை)



ஜிப்மரில்

# தூய்மை இந்தியா விழிப்புணர்வு நிகழ்ச்சி

புதுச்சேரி, ஏப்.3-

மத்திய அரசின் தூய்மை இந்தியா இயக்கத்தின் ஒரு பகுதியாக ஏப்ரல் 1 முதல் 15-ந் தேதி வரை சுவச்சதா பக்வாடா (தூய்மை இருவாரம்) கடைப்பிடிக்கப்படுகிறது. இதையொட்டி அரசு அலுவலகங்களில் துப்புரவு பணிகள், விழிப்புணர்வு மற்றும் உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது.

அதன்படி கோரிமேடு ஜிப்மர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் இருவார தூய்மை இந்தியா சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு மருத்துவ கண்காணிப்பாளர் வினோத்குமார் தலைமை தாங்கினார். துணை இயக்குனர் (நிர்வாகம்) ரங்கபாஷ்யம் முன்னிலை வகித்தார். கூடுதல் மருத்துவ கண்காணிப்பாளர் பெட்சி மாதாய், மூத்த மருத்துவ அதிகாரி பிரார்த்தனா, நிர்வாக அதிகாரி ஹவா சிங் ஆகியோர் கலந்து கொண்டு சுத்தம் மற்றும் சுகாதாரத்தின் முக்கியத்துவம், நோயாளி பாதுகாப்பு, தொற்று தடுப்பு மற்றும் கட்டுப்பாடு நடவடிக்கைகள் குறித்து விளக்கினர்.

முன்னதாக தூய்மை இந்தியா உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சி நடந்தது. தொடர்ந்து பராமரிப்பு பணியாளர்கள் விழிப்புணர்வு நாடகம் நடைபெற்றது. இதில் ஜிப்மர் அதிகாரிகள், மாணவ-மாணவிகள் மற்றும் பலர் கலந்துகொண்டனர். இதேபோல் காரைக்கால் மற்றும் ஏனாம் ஆகிய வளாகங்களில் தூய்மை இந்தியா விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

தினமலர்
புதுச்சேரி | வெள்ளி | 3.4.2026

# ஜிப்மரில் இருவார சுகாதார விழிப்புணர்வு

**புதுச்சேரி, ஏப். 3–**

புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் ஜிப்மர் வளாகங்களில், வரும் 15ம் தேதிவரை இருவார சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது.

புதுச்சேரி ஜிப்மரில் நடந்த துவக்க விழாவில், மூன்று மொழிகளில் சுவச்சதா உறுதிமொழி ஏற்கப்பட்டது. இதன் மூலம் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் சுத்தமான மற்றும் பசுமையான சூழலை பேணுவதற்கான தங்களது உறுதிப்பாட்டை மீண்டும் உறுதி செய்தனர்.

மருத்துவ கண்காணிப்பாளர் வினோத்குமார், துணை இயக்குநர் ரங்க பாஷ்யம், கூடுதல் மருத்துவ கண்காணிப்பாளர் பெட்சி மாதாய், மூத்த மருத்துவ அதிகாரி பிரார்த்தனா, மூத்த நிர்வாக அதிகாரி ஹவா சிங் ஆகியோர் உறுதிமொழியை முன்னிலை வகித்து, சுத்தம் மற்றும் சுகாதாரத்தின் முக்கியத்துவம் நோயாளி பாதுகாப்பு, தொற்று தடுப்பு மற்றும் கட்டுப்பாடு நடவடிக்கைகள், பொதுச் சுகாதார முன்னேற்றத்தில் வகிக்கும் பங்கு குறித்து பேசினார்.

நிகழ்ச்சியில், பராமரிப்பு பணியாளர்களால் அரங்கேற்றப்பட்ட விழிப்புணர்வு நாடகம், சுகாதாரம், கழிவு மேலாண்மை, தனிநபர் தூய்மை மற்றும் சமூக பங்கேற்பின் அவசியத்தை விளக்கப்பட்டது.

சுவச்சதா பக்வாடா நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், வளாகம் முழுவதும் சுத்தம் செய்யும் இயக்கங்கள், மருத்துவ மற்றும் செவிலியர் மாணவர்களுக்கான போட்டிகள், மரக்கன்றுகள் நடுதல் போன்ற பல்வேறு நிகழ்வுகள் நடைபெற உள்ளன.



ஜிப்மர் மருத்துவமனையில், இரண்டு வார சுத்தம் மற்றும் சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சி துவங்க விழாவில், சுவச்சதா உறுதி மொழி ஏற்கப்பட்டது.

தினமலர் 75
தேசிய தமிழ் நாளிதழ்

# ஜிப்மரில் இருவார சுகாதார விழிப்புணர்வு

ADDED : ஏப் 03, 2026 05:18 AM




புதுச்சேரி: புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் ஜிப்மர் வளாகங்களில், வரும் 15ம் தேதிவரை இருவார சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது.

புதுச்சேரி ஜிப்மரில் நடந்த துவக்க விழாவில், மூன்று மொழிகளில் சுவச்சதா உறுதிமொழி ஏற்கப்பட்டது. இதன் மூலம் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் சுத்தமான மற்றும் பசுமையான சூழலை பேணுவதற்கான தங்களது உறுதிப்பாட்டை மீண்டும் உறுதி செய்தனர்.

மருத்துவ கண்காணிப்பாளர் வினோத்குமார், துணை இயக்குநர் ரங்கபாஷ்யம், கூடுதல் மருத்துவ கண்காணிப்பாளர் பெட்சி மாதாய், மூத்த மருத்துவ அதிகாரி பிரார்த்தனா, மூத்த நிர்வாக அதிகாரி ஹவா சிங் ஆகியோர் உறுதிமொழியை முன்னிலை வகித்து, சுத்தம் மற்றும் சுகாதாரத்தின் முக்கியத்துவம் நோயாளி பாதுகாப்பு, தொற்று தடுப்பு மற்றும் கட்டுப்பாடு நடவடிக்கைகள், பொதுச் சுகாதார முன்னேற்றத்தில் வகிக்கும் பங்கு குறித்து பேசினார்.

நிகழ்ச்சியில், பராமரிப்பு பணியாளர்களால் அரங்கேற்றப்பட்ட விழிப்புணர்வு நாடகம், சுகாதாரம், கழிவு மேலாண்மை, தனிநபர் துாய்மை மற்றும் சமூக பங்கேற்பின் அவசியத்தை விளக்கப்பட்டது.

சுவச்சதா பக்வாடா நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், வளாகம் முழுவதும் சுத்தம் செய்யும் இயக்கங்கள், மருத்துவ மற்றும் செவிலியர் மாணவர்களுக்கான போட்டிகள், மரக்கன்றுகள் நடுதல் போன்ற பல்வேறு நிகழ்வுகள் நடைபெற உள்ளன.

Link: https://www.dinamalar.com/news/puducherry/two-week-health-awareness-at-jipmer/4189027

மாலை மலர்
2-4-2026 (வியாழக்கிழமை)




# ஜிப்மரில் சுகாதார உறுதிமொழி ஏற்பு

புதுச்சேரி, ஏப்.2-

மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் அறிவுறுத்தலின்படி, ஜிப்மர் சுவச்சதா பக்வாடா நிகழ்ச்சியை நடத்தியது.

இந்த 2 வார சுத்தம் மற்றும் சுகாதார விழிப்புணர்வு இயக்கம் வருகிற 15-ந் தேதி வரை புதுவை, காரைக்கால் மற்றும் யானம் ஆகிய ஜிப்மர் வளாகங்களில் நடைபெற உள்ளது.

நிகழ்ச்சி, மூன்று மொழிகளில் சுவச்சதா உறுதிமொழி ஏற்பு மூலம் தொடங்கப்பட்டது. மருத்துவ கண்காணிப்பாளர் வினோத் குமார், துணை இயக்குநர் ரங்கபாஷ்யம், கூடுதல் மருத்துவ கண்காணிப்பாளர் பெட்சி மாதாய், மூத்த மருத்துவ அதிகாரி பிரார்த்தனா, மூத்த நிர்வாக அதிகாரி ஹவா சிங் ஆகியோர் உறுதிமொழி ஏற்றனர்.

நிகழ்ச்சியின் கீழ் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், வளாகம் முழுவதும் சுத்தம் செய்யும் இயக்கங்கள், மருத்துவ மற்றும் செவிலியர் மாணவர்களுக்கான போட்டிகள், மரக்கன்றுகள் நடுதல் போன்ற பல்வேறு செயல்பாடுகள் நடைபெற உள்ளன.

இந்த நிகழ்வு, சுத்தம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பொதுச் சுகாதார மேம்பாட்டில் ஜிப்மரின் தொடர்ந்து நிலைத்திருக்கும் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது.

நமது முரசு
NAMATHU MURASU
தமிழ் மக்களின் நாடித்துடிப்பு
மாலை நாளிதழ்

# ஜிப்மரில் சுகாதார உறுதிமொழி ஏற்பு

புதுச்சேரி, ஏப்.2-
மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் அறிவுறுத்தலின்படி ஜிப்மர் சுவச்சதா பக்வாடா நிகழ்ச்சியை நடத்தியது.

இந்த 2 வார சுத்தம் மற்றும் சுகாதார விழிப்புணர்வு இயக்கம் வருகிற 15-ந் தேதி வரை புதுவை, காரைக்கால் மற்றும் ஏனாம் ஆகிய ஜிப்மர் வளாகங்களில் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்ச்சி மொழிகளில் சுவச்சதா உறுதிமொழி ஏற்பு மூலம் தொடங்கப்பட்டது. மருத்துவ கண்காணிப்பாளர் வினோத் குமார், துணை இயக்குனர் ரங்கபாஷ்யம், கூடுதல் மருத்துவ கண்காணிப்பாளர் பெட்சி மாதாய், மூத்த மருத்துவ அதிகாரி பிரார்த்தனா, மூத்த நிர்வாக அதிகாரி ஹவா சிங் ஆகியோர் உறுதிமொழி ஏற்றனர்.

இந்த நிகழ்ச்சியின் கீழ் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், வளாகம் முழுவதும் சுத்தம் செய்யும் இயக்கங்கள், மருத்துவ மற்றும் செவிலியர் மாணவர்களுக்கான போட்டிகள், மரக்கன்றுகள் நடுதல் போன்ற பல்வேறு செயல்பாடுகள் நடைபெற உள்ளன. இந்த நிகழ்ச்சி சுத்தம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பொதுச் சுகாதார மேம்பாட்டில் ஜிப்மரின் தொடர்ந்து நிலைத்திருக்கும் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது.